RNI-N0: TNTAM/2021/83936




மாலை தந்தி
MALAI THANTHI
தமிழால் வெல்வோம்
www.malaithanthi.in
DAILY EVENING
மாலை நாளிதழ்
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




சிவகங்கை | மலர்-5 | இதழ்- 225 | ஆகஸ்டு 20, 2026 வியாழக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

# முதலமைச்சர் மருத்துவக் காப்பீடு தொகை ரூ.25 லட்சமாக உயர்வு

## முதல்வர் விஜய் அறிவிப்பு

சென்னை: ஆக,20-

"முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் இலவச மருத்துவ சிகிச்சைக்கான மருத்துவ காப்பீட்டுத் தொகை ஆண்டொன்றுக்கு, தற்போதுள்ள ரூபாய் 5 லட்சத்திலிருந்து ரூபாய் 25 லட்சமாக உயர்த்தப்படும்." என தமிழக முதல்வர் விஜய் அறிவித்துள்ளார்.

தமிழக சட்டப்பேரவை கூட்டம் இன்று தொடங்கியதும் விதி எண் 110-ன் கீழ் முதல்வர் விஜய் பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு பேசினார்.

அப்போது அவர், "ஒரு உயிரின் மதிப்பை, அவரது வருமானம் தீர்மானிக்கக் கூடாது. வசதிப்படைத்தவர், வசதி குறைவானவர் என்ற நிலை மருத்துவத் துறையில் இருக்கக் கூடாது, அனைவருக்கும் சமமான மருத்துவ சேவை, எளிதாக கிடைக்க வேண்டும் என்பதில் நமது அரசு உறுதியாக உள்ளது.

மருத்துவம் என்பது சலுகை அல்ல; ஒவ்வொரு மனிதனின் அடிப்படை உரிமை.

ஒரு மனிதனின் உயிரைக் காப்பாற்றுவதில் தாமதமாகும் ஒவ்வொரு நொடியும் மிக கொடியது, மருத்துவத்தைத் தேடிவரும் மக்களின் பாதையில் இருக்கும் தடைகளான வறுமை, தொலைவு, மருத்துவர் பற்றாக்குறை, மருந்துகளின் விலை, மருத்துவ விழிப்புணர்வு இல்லாமை, காத்திருப்பு, அவசரகால வசதியின்மை போன்றவற்றை படிப்படியாக அகற்றி, ஏழைபணக்காரர், கிராமம் நகரம் என்ற பாகுபாடின்றி, ஒவ்வொருவருக்கும் தரமான மற்றும் எளிதான மருத்துவ சேவை கிடைக்கச் செய்வதை முதன்மையான நோக்கமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறது நமது அரசு.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறையில் சில அறிவிப்புகளை சட்டப்பேரவை விதி 110 இன் கீழ் இன்று



வெளியிட விரும்புகிறேன்.

(i) வடசென்னை மக்களுக்கு உயர்தர மருத்துவ சேவை எளிதில் கிடைக்கும் வகையில், பெரம்பூரில் ரூபாய் 300 கோடி மதிப்பீட்டில் 400 படுக்கைகள் கொண்ட உலகத் தரத்திலான "பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனை" அமைக்கப்படும்.

(ii) முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் இலவச மருத்துவ சிகிச்சைக்கான மருத்துவ காப்பீட்டுத் தொகை ஆண்டொன்றுக்கு, தற்போதுள்ள ரூபாய் 5 லட்சத்திலிருந்து ரூபாய் 25 லட்சமாக உயர்த்தப்படும்.

திருநங்கைகளுக்கான அறுவை சிகிச்சை:

திருநங்கையர்களுக்கான மருத்துவ மற்றும் அறுவைச் சிகிச்சை சேவைகள் கூடுதலாக சென்னை ஸ்டான்லி, திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கல்பட்டு, திருவாரூர், தருமபுரி மற்றும் கன்னியாகுமரி ஆகிய 7 அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் வழங்கப்படும்.

(iii) தமிழ்நாட்டில், 2014 ஆம் ஆண்டுக்கு பிறகு, புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்படாத நிலையில், தரமான மருத்துவ சேவைக்குத் தேவையான செவிலியர், மருந்தியல் மற்றும் துணை மருத்துவப் பணியாளர்களை உருவாக்கும் வகையில், அரசு மருத்துவக் கல்லூரிகளில் ரூபாய் 351 கோடி மதிப்பீட்டில் கூடுதல் மாணவர் சேர்க்கை இடங்கள் உருவாக்கப்படும்.

7 புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் தொடங்கப்பட்டு, 660 B.Sc. செவிலியர் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்பட்டு, ஏற்கனவே உள்ள செவிலியர் கல்லூரிகள் மற்றும் செவிலியர் பள்ளிகளில் கூடுதலாக 1,925 கூடுதல் மாணாக்கர் இடங்கள், இயன்முறை மருத்துவம் உள்ளிட்ட 12 துணை மருத்துவப் படிப்புகளில் 2,778 மாணாக்கர் இடங்கள், மருந்தியல் படிப்புகளில் 735 கூடுதல் இடங்கள் என மொத்தம் சுமார் 6,098 கூடுதல் மாணாக்கர் இடங்கள் உருவாக்கப்படும்.

(iv) தமிழ்நாட்டில் அதிகரித்து வரும் புற்றுநோய்களைத் தடுக்கவும், தரமான சிகிச்சை வழங்கவும், "முதலமைச்சரின் புற்றுநோய் பராமரிப்பு இயக்கம்" (Chief Minister's Cancer Care Mission) 673 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேம்படுத்தப்படும். சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் 471 கோடியே 80 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் G+14 தளங்களுடன் ஒருங்கிணைந்த புற்றுநோய் சிகிச்சைப் பிரிவு அமைக்கப்படும்.

மேலும், ஐந்து மண்டல புற்றுநோய் மையங்கள் (Regional Cancer Care Centres) தஞ்சாவூர், கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி மற்றும் விழுப்புரம் ஆகிய மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் நிறுவப்படும். முதற்கட்டமாக, மதுரை ராஜாஜி மருத்துவமனையில் ரூபாய் 84 கோடியில் G+8 தளங்களுடன் மண்டல புற்றுநோய் மையம் தொடங்கப்படும்.

ரோபோடிக் அறுவை சிகிச்சை, Linear Accelerator (LINAC) கதிர்வீச்சு, நவீன கருவிகள், இலக்கு மற்றும் நோய் எதிர்ப்பு சிகிச்சைகளுக்காக, அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவ மனைகளுக்கு 106 கோடியே 17 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். மருத்துவர்களுக்கு பயிற்சியும், நோயாளிகளுக்கு ஊட்டச்சத்து ஆதரவும் 2 கோடியே 77 இலட்சம் ரூபாய் அளிக்கப்படும்.

மேலும், தருமபுரி, விழுப்புரம், திருவண்ணாமலை, பெரம்பலூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் 1.22 லட்சம் பெண்களுக்கு 8 கோடியே 70 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் HPV DNA பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

மொத்தம் 673 கோடியே 44 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், புற்றுநோய் தாக்கத்திலிருந்து மக்களை காக்கும் வகையில் பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படும்." என்று முதல்வர் விஜய் அறிவித்தார்.

## ராமநாதபுரத்தில் 'கள்ளக்கடல் சீற்ற' அபாயம்: மீனவர்களுக்கு எச்சரிக்கை

ராமேசுவரம், ஆக.20-

ராமநாதபுரம் மாவட்டத்திற்கு கள்ளக் கடல் சீற்ற நிகழ்வுக்கான எச்சரிக்கையை தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையம் (ஆக.20) இன்று வரை விடுத்துள்ளது.

முன்னறிவிப்பின்றி திடீரெனக் கடலில் ஏற்படும் உயர் அலைகள் மற்றும் கடல் சீற்றத்தையே 'கள்ளக்கடல்' (Swell Surge) என்று அழைக்கின்றனர். "கள்ளக்கடல் என்ற சொல் மலையாளத்திலிருந்து பெறப்பட்டது. 'கள்ளன் + கடல்', கள்ளன் என்றால் திருடன். திருடன் போல எந்தவித சத்தமும், முன்னறிவிப்பும் இல்லாமல் மக்கள் வசிக்கும் கரையோரப் பகுதிகளில் கொந்தளிப்புடன் நுழையும் கடல் நீர் என்ற அர்த்தத்தில் இந்தப் பெயர் வைக்கப்பட்டது.



இந்நிலையில், தேசிய பெருங்கடல் தகவல் சேவை மையம் கேரளம், தென் தமிழகம் (கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி, ராமநாதபுரம்) மற்றும் லட்சத்தீவு பகுதிகளுக்கு கள்ளக்கடல் நிகழ்வு நேற்று (புதன் கிழமை) முதல் ஆக.20ம் தேதி (வியாழக்கிழமை) மாலை 5.30 மணி வரையிலும் நடைபெறக் கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

எனவே, மீனவர்கள் அனைவரும் கடற்கரைப் பகுதிகளில், குறிப்பாக தாழ்வான பகுதிகளில் அவ்வப்போது எழும் அலைகளின் சீற்றம் குறித்து விழிப்புடன் இருக்குமாறு எச்சரிக்கப்படுகிறார்கள்.

நாட்டுப் படகு மீனவர்கள் கரையோரம் நடைபெறக்கூடும் அலைகளின் சீற்றம் காரணமாக கடலுக்குச் செல்ல வேண்டாம் என கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். மேலும், படகுகள் ஒன்றுடன் ஒன்று மோதி சேதமடைவதைத் தவிர்க்க, அவற்றுக்கிடையே போதிய இடை வெளி விட்டு நங்கூரமிட்டுவைத்திடக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

## தூக்கு தண்டனை முறையை மாற்றக் கோரிய மனு தள்ளுபடி: உச்ச நீதிமன்றம் உத்தரவு

புதுடெல்லி, ஆக.20-

தூக்கிலிட்டு மரண தண்டனையை நிறைவேற்றும் தற்போதைய முறையை ரத்து செய்து, அதற்கு பதிலாக வலி குறைந்த மாற்று முறைகளை கொண்டு வரக் கோரிய மனுவை உச்ச நீதிமன்றம் தள்ளுபடி செய்தது.

மரண தண்டனையை நிறைவேற்ற தூக்கிலிடுவதற்கு பதிலாக விஷ ஊசி செலுத்துவது, துப்பாக்கியால் சுடுவது, உடலில் மின்சாரம் பாய்ச்சுவது போன்ற வலி குறைந்த முறைகளை பின்பற்றக் கோரி உச்சநீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை விசாரித்த நீதிபதிகள் விக்ரம் நாத் மற்றும் சந்தீப் மேத்தா ஆகியோர் அடங்கிய அமர்வு அதை தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

அதே நேரத்தில், தூக்கிலிட்டு மரண தண்டனையை நிறைவேற்றும் முறையை மாற்றுவது குறித்து மத்திய அரசு விரிவான ஆய்வை மேற்கொள்ள எந்தத் தடையும் இல்லை என்றும், மாற்று முறை அரசியலமைப்பின் நோக்கமான குறைந்தபட்ச வலி, வேதனையுடன் மனித கண்ணியத்தை பாதுகாக்கும் வகையில் இருக்குமா என்பதை நிபுணர் குழு மூலம் ஆராயலாம் என்றும் அந்த அமர்வு தெரிவித்தது.

எதிர்காலத்தில் வலுவான மருத்துவ அல்லது அறிவியல் ஆதாரங்கள் கிடைத்தால், மரண தண்டனை நிறைவேற்றும் முறையின் அரசியலமைப்புச் சட்டப்பூர்வத் தன்மையை மீண்டும் ஆய்வு செய்வதற்கு இந்த தீர்ப்பு தடையாக இருக்காது என நீதிபதிகள் தெளிவுபடுத்தியுள்ளனர்.

## கட்டுமானப் பொருட்களின் விலைவாசி உயர்வை அரசு கட்டுப்படுத்த வேண்டும்: ஐ.பெரியசாமி கோரிக்கை

சென்னை, ஆக.20-

சட்டப்பேரவையில் நீர்வளத்துறை மானியக் கோரிக்கை மீதான விவாதத்தில் முன்னாள் துணைப் பொதுச்செயலாளர் ஐ. பெரியசாமி பேசுகையில், 1 லட்சம் கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுத்தவர் கலைஞர். ஆனால், 'கலைஞர் கனவு இல்லம்' திட்டத்தின் பெயரை மாற்றிவிட்டீர்கள். வெற்றி வீடுகள் கட்டும் திட்டத்தில் கட்டப்படும் வீடுகளின் எண்ணிக்கையை அரசு குறைத்துவிட்டது. 1 லட்சம் வீடுகள் என இருந்த நிலையில், தற்போதைய ஆட்சியில் ஆண்டுக்கு 70,000 வீடுகள் என இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கட்டுமானப் பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது.



எம்-சாண்ட் விலை அன்று ரூ.2,000 ஆக இருந்தது, தற்போது ரூ.4,000 ஆக உயர்ந்துள்ளது. கட்டுமானப் பொருட்களின் விலை தற்போது சுமார் 20 சதவீதம் உயர்ந்துள்ளது. குடிசை இல்லா மாநிலத்தை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தில்தான் கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்பட்டன. பிரதமர் வீடு கட்டும் திட்டத்தின் கீழ் 38 சதவீதம்தான் ஒன்றிய அரசு கொடுத்தது. ஒன்றிய அரசு ரூ.1 லட்சம் கொடுத்த நிலையில், திமுக ஆட்சியில் ரூ.2.75 லட்சம் அளித்து வீடு கட்டப்பட்டது. கட்டுமானப் பொருட்களின் விலைவாசி உயர்வை அரசு கட்டுப்படுத்த வேண்டும்.

கட்டுமானப் பொருட்களின் விலையை அவரவர் விருப்பம்போல் உயர்த்தி வருகின்றனர். நிறுவனங்கள் அவர்களுக்கு ஏற்றவாறு விலையை உயர்த்திக்கொண்டே செல்கின்றன. மறுமலர்ச்சி திட்டத்தில் இருந்த அண்ணாவின் பெயரையே மாற்றிவிட்டீர்கள். அண்ணாவின் பெயரை மாற்றியது வருத்தமாக உள்ளது. திமுக ஆட்சியில் 7,500 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டப்பட்டுள்ளன. திமுக ஆட்சியில் 100 நாள் வேலைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. நான் அன்பாக, அக்கறையாக, ஆசையாகப் பேசியதால்தான் மக்கள் என்னை 7 முறை எம்.எல்.ஏ.-வாக வெற்றிபெற வைத்துள்ளனர். நாங்களும் மக்களுக்காக அரசியல் பயணத்தைத் தொடர்கிறோம்.

தற்போது ஒன்றிய அரசு கொண்டுவந்துள்ள திட்டத்தில் 40% நிதியை மாநில அரசு வழங்க வேண்டும். 100 நாள் வேலைத் திட்டத்தில் ஒன்றிய அரசு 100 சதவீதம் நிதி வழங்கியது. 2023-24 இல் 100 நாள் வேலைத் திட்டத்தில் 40 கோடி வேலைநாட்களைக் கொடுத்தோம். பிரதமர் வீடு கட்டும் திட்டத்தில் 60 சதவீதம் நிதி தர வேண்டிய இடத்தில் 38% தான் ஒன்றிய அரசு தருகிறது. அரசு அறிவித்தபடி 150 நாள் வேலை அளிக்க முடியுமா?

ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்பது போல்தான் இந்தத் திட்டம் உள்ளது. பெரிய தோட்டம் வைத்திருப்பவர்கள் கூட 125 நாள் வேலையை நம்பியுள்ளனரே தவிர, ரூ.12,000 கோடி மட்டுமே ஒதுக்கியுள்ளதால் 150 நாள் வேலை என்பது சாத்தியமில்லாதது. திமுக ஆட்சியில் கிராமச் சாலைத் திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டது. 150 நாட்கள் வேலை அளிக்க வேண்டும் என்றால் ரூ.30,000 கோடி தேவைப்படும். தமிழ்நாட்டில் எந்த நதியும் ஓடவில்லை, அனைத்துப் பகுதிகளிலும் வறட்சி நிலவுகிறது என்று கூறியுள்ளார்.

## இதுவா தமிழர்களுக்கான ஆட்சி! ஒரு உயிரிழப்பின் வேதனை த.வெ.க., அரசுக்கு புரியவில்லை...EPS சரமாரி குற்றச்சாட்டு

சென்னை, ஆக.20-

தாங்கள் கொண்டு வந்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதிக்க மறுத்ததால் அதிமுக உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்தனர். கவன ஈர்ப்பு தீர்மானம் மீது பேச அனுமதிக்கவில்லை என்று அதிமுக உறுப்பினர்கள் அவைக்கு வெளியே முழக்கமிட்டனர்.

சீர்காழி மீனவர் ஒருவர் சவுதியில் சுட்டு கொல்லப்பட்டது குறித்து அதிமுக சார்பில் கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டுவரப்பட்டதாக செய்தியாளர்களிடம் பேசிய எடப்பாடி பழனிசாமி குறிப்பிட்டார். இந்த



விவகாரம் தொடர்பாக கவன ஈர்ப்பு கொடுத்து 5 நாட்களாகி விட்டது, இன்னும் விவாதத்திற்கு எடுத்து கொள்ளவில்லை.

சவுதி அருகே ஈரானிய கடற்கொள்ளையர்கள் சுட்டதில் தொடுவாய் கிராமத்தைச் சேர்ந்த மீனவர் உயிரிழந்துள்ளார்.

கடற்கொள்ளையர்கள் சுட்டத்தில் மேலும் 3 மீனவர்கள் படுகாயம் அடைந்து சவுதியில் சிகிச்சை பெறுகின்றனர். சவுதியில் இறந்த மீனவர் உடலை தமிழ்நாட்டிற்கு கொண்டுவர கூட தவெக அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. வெறும் ரீல்ஸ் வெளியிடும் அரசாகவே தவெக அரசு செயல்படுகிறது. சவுதியில் இறந்த சீர்காழி மீனவர் உடலை இங்கு கொண்டு வர எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. பாதிக்கப்பட்ட குடும்பத்தினரின் மனநிலையை தவெக அரசு துளியும் புரிந்து கொள்ளவில்லை, ஏனென்றால் இங்கு தவெக அரசு என்ற ஒன்று நடக்கவே இல்லை. இவர்களை தமிழர்களின் நலனை காக் போகிறார்கள்? எவ்வளவு துயரமான விஷயம் இது, இதை பற்றிய கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதத்திற்கு எடுக்காமல் காலம் தாழ்த்துகிறார்கள் என்று கடுமையாக சாடினார்.

இது போன்ற அவசர விவகாரங்கள் குறித்து கவன ஈர்ப்பு தீர்மானம் பேரவையில் கொண்டு வந்தால் அது திமுக, அதிமுக நாங்கள் யார் ஆட்சியில் இருந்த போதும் உடனடியாக பேரவையில் இது குறித்து பேசி உரிய நடவடிக்கை எடுப்போம். ஆனால் இவர்களோ! என்ன சொல்வது இவர்களை.. எந்த வேகத்தில் ஆட்சிக்கு வந்தார்களோ, அதே வேகத்தில் அதலபாதாளத்திற்கு இவர்கள் செல்வார்கள் என்று சாடினார். கடற்கொள்ளையர்களால் சுடப்பட்டு உயிரிழந்த மீனவர் உடலை மீட்டு வரும் கடமையை தட்டிக்கழிக்கிறது தவெக அரசு. குறிப்பிட்ட மீனவர் உயிரிழப்பு குறித்த கவன ஈர்ப்பு தீர்மானத்தை விவாதத்திற்கு எடுத்து கொள்ள வேண்டும் என்று நாங்கள் பேரவையில் பேசும் போது, தவெக எம்எல்ஏ-க்கள் கைத்தட்டி சிரிக்கிறார்கள் என்று ஆதங்கம் தெரிவித்தார்



# பாடியநல்லூர் ஊராட்சியில் கிராம சபை கூட்டம்

மாதவரம், ஆக.20-

திருவள்ளூர் மாவட்டம், மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் ஊராட்சி ஸ்ரீ கெங்கையம்மன் ஆலய மண்டபத்தில் 80-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு கிராம சபை கூட்டம் ஊராட்சி செயலர் லோகநாதன் தலைமையில் நடைபெற்றது. சோழவரம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி துணை அலுவலர் (சத்துணவுத் திட்டம்) பற்றாளர் ஸ்ரீதேவி முன்னிலை வகித்தார். கூட்டத்தில் காசநோய் மற்றும் எச்.ஐ.வி.நோய் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் சுத்தமான குடிநீர், தரமான சாலை, சுற்றுச்சூழல் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு பணிகள் குறித்து பொதுமக்களிடையே ஆலோசிக்கப்பட்டது. பின்னர் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. இதில் அரசு அதிகாரிகள், கிராமபொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# வெலிங்டன் பேரக்ஸ் ஸ்ரீ பத்மதட்டச்சு பள்ளியில் மாணவ மாணவியர்கள் தேர்வில் சாதனை: சான்றிதழ் வழங்கும் விழா

நீலகிரி, ஆக.20-

நீலகிரி மாவட்ட தட்டச்சு தேர்வில் தட்டச்சு பயிலகம் மாணவ-மாணவிகள் சாதனை பாராட்டு விழா மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் விழா நீலகிரி மாவட்டம், குன்னூர் வட்டம், வெலிங்டன் பேரக்ஸில் அமைந்துள்ள ஸ்ரீ பத்ம தட்டச்சு பயிலகத்தின் மாணவ-மாணவிகள், தமிழக அரசு தட்டச்சுத் தேர்வில் (2026) சிறப்பான முறையில் தேர்ச்சி பெற்று சாதனை படைத்துள்ளனர். இம்மாணவர்களுக்குப் பாராட்டு விழா மற்றும் அரசு சான்றிதழ் வழங்கும் விழா கல்வி நிறுவன வளாகத்தில் விமரிசையாக நடைபெற்றது. வரவேற்புரை இந்நிகழ்ச்சிக்கு பயிலகத்தின் முதல்வர் பாலச்சந்தர் வரவேற்புரை ஆற்றினார். சிறப்பு விருந்தினர்கள் விழாவிற்கு முன்னாள்



கன்டோன்மென்ட் துணைத் தலைவரும், நீலகிரி மக்கள் நற்பணி மய்யத்தின் தலைவருமான கன்டோன்மென்ட் வினோத் குமார் ஆர். மற்றும் நீலகிரி மக்கள் நற்பணி மய்யம் சட்ட ஆலோசகர் வழக்கறிஞர் தினேஷ்குமார் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டு, வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு அரசுச் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினர்.

கலைநிகழ்ச்சிகள் தொடர்ந்து பள்ளி மாணவிகளான சுப்பிரியா தேவி உள்ளிட்டோரின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. குறிப்பாக, மாணவி ஷாலினி நிகழ்த்திய தமிழகத்தின் பாரம்பரிய சிலம்பாட்டம் பார்வையாளர்களை வியப்பில் ஆழ்த்தியது. சிறப்புப் பங்கேற்பு இவ்விழாவில் ராணுவ அதிகாரிகள், மாணவ-மாணவியரின் பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் திரளாகக் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நன்றியுரை விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ பத்மா இன்ஸ்டிடியூட் முதல்வர் பாலச்சந்தர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் செய்திருந்தனர். நிறைவாக, தட்டச்சு மாணவர்கள் நன்றிகூறினர்.

முக்கிய சாதனையாளர்கள்:

ஆங்கிலம் இளநிலை (முதல் வகுப்பு - சிறப்புத் தேர்ச்சி): துர்கா தேவி, தீபிகா, சாய் கரண் சாகில், சரிதில், சங்கர் கணேஷ், மரியா கெவின்.

ஆங்கிலம் முதுநிலை (முதல் வகுப்பு - சிறப்புத் தேர்ச்சி): நிதிக். நித்தீஷ், மேகா, ஷாலினி. சுப்பிரியா தேவி.

தமிழ் இளநிலை (முதல் வகுப்பு - சிறப்புத் தேர்ச்சி): காயத்ரி, சங்கர் கணேஷ்.

தமிழ் முதுநிலை (இரண்டாம் வகுப்பு): பிரபாகரன். ஆங்கிலம் இளநிலை (முதல் வகுப்பு): வெங்கடேஷ், தமிழ் செல்வன், முருகராஜ், மோகன் குமார், சஞ்சய் குமார், டில்லிபாபு, ரிதன்யா, ராஜேஷ்கண்ணன்.

ஆங்கிலம் இளநிலை (இரண்டாம் வகுப்பு): லஷ்மி, சங்கிலி கருப்பண் .பார்த்திபன். ஆங்கிலம் முதுநிலை

(இரண்டாம் வகுப்பு): புகழேந்தி. வெற்றி பெற்ற மாணவிகள் மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கி சிறப்பித்தனர்.





# தாம்பரத்தில் அருள்மிகு செல்வ விநாயகர் கோதண்டராமர் திருக்கோயிலில் சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு,

## பொது விருந்து ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலை வழங்கிய அமைச்சர் சரத்குமார்

செங்கல்பட்டு, ஆக.20-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் பேருந்து நிலைய அருகே அருள்மிகு செல்வ விநாயகர் கோதண்டராமர் திருக்கோயிலில் சுதந்திர தின விழா சிறப்பு வழிபாடு, பொது விருந்து ஏழை எளிய மக்களுக்கு வேட்டி, சேலை வழங்கல் தாம்பரம் ஜி.எஸ்.டி. சாலையில் அமைந்துள்ள அருள்மிகு செல்வ விநாயகர் கோதண்டராமர் திருக்கோயிலில் நாட்டின் சுதந்திர தினத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு மற்றும் பொது விருந்து நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் அமைச்சர் சரத்குமார் கலந்து கொண்டு சிறப்பு வழிபாட்டில் பங்கேற்றார். தொடர்ந்து நடைபெற்ற பொது விருந்தில் பொதுமக்களுடன் அமர்ந்து உணவு அருந்தினார். இதனைத் தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு வேட்டி மற்றும் சேலைகளை அமைச்சர் சரத்குமார் வழங்கினார். நிகழ்ச்சியில் பொதுமக்கள் மற்றும் பக்தர்கள் திரளாக கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் செங்கல்பட்டு இந்து சமய அறநிலையத்துறை உதவி ஆணையாளர் ஆர். ராஜலட்சுமி, ஆணையர் அலுவலக ஆய்வர் பி. தண்டபாணி, தாம்பரம் சரக ஆய்வர் ஏ.பி வெங்கடேஷன், திருக்கோயில் தக்கார் து.சுரேஷ், செயல் அலுவலர் ந.சரவணகுமார், சு.மோகன் ராஜ், ஆலய எழுத்தர் இரா. ரமேஷ், கே. குமார், என். சம்பத் ஏ.ரவிச்சந்திரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்நிகழ்ச்சி, சமத்துவம் மற்றும் சமூக நல்லிணக்கத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்தது.

# விளாங்காடுபாக்கம் ஊராட்சி பொதுமக்களுக்கு அன்னதானம்- நலத்திட்ட உதவி வழங்கல்

மாதவரம், ஆக.20-

மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் விளாங்காடுபாக்கம் ஊராட்சியில் தேவ பர்வதம் ஜெபக்குழு சாரா சம்பத் குமார் சார்பில் இந்திய திருநாட்டின் 80-வது சுதந்திர தினத்தை முன்னிட்டு பொது மக்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி தேவ பர்வதம் ஜெபக்குழுவின் நிர்வாகி ஜெயந்தி ரங்கநாதன் தலைமையில் நடை பெற்றது.நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக முன்னாள் புழல் ஒன்றிய திமுக செயலாளர் வழக்கறி ஞர் பெ.சரவணன் மற்றும் முன்னாள் விளாங்காடுபாக்கம் ஊராட்சி மன்ற தலைவர்





பாரதிசரவணன் ஆகியோர் கலந்துகொண்டு பொது மக்களுக்கு அறுசுவை அன்னதானம் மற்றும் புடவை போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினர். இதில் வழக்கறிஞர் பரிமளசெல்வம் உள்ளிட்ட சமூக ஆர்வலர்கள், கிராம பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# நீலகிரி மாவட்டத்தில் தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் மாவட்ட ஆட்சித்தலைவர் தகவல்

உதகை, ஆக.20-

உதகை மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம் மூலமாக தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் ஒவ்வொரு மாதமும் நடத்தப்பட்டு வருகிறது. இம்மாதத்திற்கான தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம் 21.08.2026 (வெள்ளிக்கிழமை) அன்று மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையம், மாவட்ட ஆட்சியர் கூடுதல் அலுவலக வளாகம், பிங்கர்போஸ்ட், உதகையில் நடத்தப்படவுள்ளது. இம்முகாமில் 8 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு தேர்ச்சி, பட்டதாரிகள், பட்டயப்படிப்பு படித்தவர்கள், ஐடிஐ, கணினி இயக்குபவர்கள். ஒட்டுநர்கள் என அனைத்து விதமான தகுதியாளர்களும் கலந்து கொள்ளலாம். இம்முகாமில் கலந்து கொள்ள அனுமதி இலவசமானதாகும். எனவே நீலகிரி மாவட்டத்தில் தனியார்துறையில் பணிபுரிய ஆர்வமாக உள்ள அனைவரும் இந்த வேலைவாய்ப்பு முகாமில் கலந்து கொண்டு பயனடையுமாறும், இம்முகாமின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டு தனியார் துறையில் பணியமர்த்தம் செய்யப்படும் வேலைநாடுநர்களின் வேலைவாய்ப்பு அலுவலக பதிவு இரத்து செய்யப்பட மாட்டாது எனவும் தெரிவிக்கப்படுகிறது. வேலைநாடுநர்கள் www.tn-privatejobs.tn.gov.in என்ற இணையதளத்தில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விவரங்களுக்கு உதகமண்டல மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரில் அல்லது தொலைபேசி 04232444004 / 9499055948 வாயிலாக தொடர்பு கொள்ளலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் லட்சுமி பவ்யா தண்ணீரு தெரிவித்துள்ளார்.

# கிருஷ்ணகிரியில் 21ம் தேதி தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம்

கிருஷ்ணகிரி, ஆக.20-

கிருஷ்ணகிரியில் வருகிற 21ம் தேதி தனியார் துறை வேலை வாய்ப்பு முகாம் நடைபெறுகிறது. இது குறித்து மாவட்ட கலெக்டர் தினேஷ்குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தில் சிறிய அளவிலான தனியார்துறை வேலைவாய்ப்பு முகாம் வருகிற 21ம் தேதி காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை நடக்கிறது.



இந்த வேலைவாய்ப்பு முகாமில் கிருஷ்ணகிரி மற்றும் ஓசூரை சேர்ந்த முன்னணி தனியார்துறை நிறுவனங்கள் கலந்து கொண்டு ஆட்களை தேர்வு செய்யவுள்ளனர். பத்தாம் வகுப்பு தேர்ச்சி, பிளஸ் 2, பட்டதாரிகள், பொறியியல், ஐ.டி.ஐ., மற்றும் டிப்ளமோ படித்தவர்கள் என அனைத்து கல்வித் தகுதியினரும் கலந்து கொள்ளலாம். மேலும், விபரங்களுக்கு கிருஷ்ணகிரி மாவட்ட வேலைவாய்ப்பு மற்றும் தொழில்நெறி வழிகாட்டும் மையத்தினை நேரிலோ அல்லது 04343-&291983 என்ற எண்ணிலோ தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தனது செய்திக்குறிப்பில் கலெக்டர் தினேஷ்குமார் தெரிவித்துள்ளார்.



■ தமிழ்நாடு முதலமைச்சர் 15.08.2026 அன்று நடைபெற்ற சுதந்திர தின விழாவில், சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், பெண்களுக்கான சிறப்பாக சமூக சேவைக்காக, சிறந்த சமூக சேவகர் விருதினை கிருஷ்ணகிரி மாவட்டத்தைச் சேர்ந்த ஈ.இராதாவிற்கு வழங்கியதையடுத்து, மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ் குமாரிடம் 18.08.2026 அன்று காண்பித்து வாழ்த்து பெற்றார். உடன், மாவட்ட சமூக நல அலுவலர் சக்தி சுபாசினி உள்ளிட்ட பலர் உள்ளனர்.





# கிருஷ்ணகிரியில் உலகப் புகைப்பட தின விழா

கிருஷ்ணகிரி, ஆக.20-

உலகப் புகைப்பட தினத்தை முன்னிட்டு கிருஷ்ணகிரி மாவட்ட வீடியோ, போட்டோ ஒளிப்பதிவாளர்கள் சங்கம் சார்பில் ஆகஸ்ட்-19 உலகப் புகைப்பட தின விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது. கிருஷ்ணகிரி ரவுண்டானா அருகே நடைபெற்ற விழாவுக்கு காக்கும் கரங்கள் திட்ட மாநிலத் தலைவரும், மாவட்டத் தலைவருமான Ln. A. சிவக்குமார் தலைமை வகித்தார். விழாவையொட்டி கேக் வெட்டி உலகப் புகைப்பட தினத்தை கொண்டாடியதுடன், பொதுமக்களுக்கு இனிப்புகளும் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் சிறப்பு அழைப்பாளர்கள் கிருஷ்ணகிரி சரக காவல் ஆய்வாளர் கணேஷ் குமார், சங்கத்தின் மாநில பொருளாளர் பொன்னுசாமி, மாநில அமைப்பாளர் அசோக், மாநிலத் துணைத் தலைவர், மாவட்ட செயலாளர் T.A. சக்கரவர்த்தி,முன்னாள் மாவட்டத் தலைவர் அசோக் பாபு,மண்டலம் 10-ன் செயலாளர் ஐயப்பன், மாவட்ட பொருளாளர் மகபூப் பாஷா,மாவட்ட அமைப்பாளர் ராஜ்குமார் உள்ளிட்ட மாவட்ட மற்றும் நகர சங்க நிர்வாகிகள், உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டு உலகப் புகைப்பட தின வாழ்த்துகளை பரிமாறிக் கொண்டனர். புகைப்படக் கலை என்பது ஒரு நிகழ்வை பதிவு செய்வதோடு மட்டுமல்லாமல், காலத்தையும் வரலாற்றையும் அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் செல்லும் முக்கியமான பணியாகும். இத்தகைய சிறப்புமிக்க புகைப்படத் துறையில் பணியாற்றி வரும் அனைத்து புகைப்படக் கலைஞர்கள் மற்றும் ஒளிப்பதிவாளர்களுக்கும் விழாவில் வாழ்த்துகள் தெரிவிக்கப்பட்டன. விழாவில் சங்க நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள் உற்சாகமாக பங்கேற்றனர்.

# தேனி மாவட்டம், வலசதுறை கிராமத்தில் வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன், நேரில் ஆய்வு

தேனி, ஆக.20-

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றியம், அணைக்கரைப்பட்டி ஊராட்சி, வலசதுறை கிராமத்தில் ஊரக வளர்ச்சித்துறை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித்திட்டப் பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மரு. இரா. வைத்திநாதன்,நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, வலசதுறை கிராமத்திலிருந்து அத்தியூத்து ஊராட்சி வரை தார்ச்சாலை அமைக்க மலைவாழ்



மக்கள் கோரிக்கை வைத்ததையொட்டி, ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் முதற்கட்டமாக விக்சித் பாரத் கிராமப்புற வேலைவாய்ப்பு மற்றும் வாழ்வாதார திட்டத்தின் கீழ் முதலில் சாலைகளில் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தியதுடன், அதனைத் தொடர்ந்து கிராமப்புற சாலை மேம்பாட்டுத் திட்டத்தின் மூலம் சாலை அமைக்க உரிய இடங்களை வரைவு செய்து அதற்கானப் பணிகளை மேற்கொள்ள வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் வருவாய்த்துறை அலுவலர்கள் ஒருங்கிணைந்து செயல்பட வேண்டும் என அறிவுறுத்தினார். பின்னர்,வலசதுறை மலைவாழ் மக்களை சந்தித்து கோரிக்கைகள் குறித்து கேட்டறிந்தார். அப்பொழுது அப்பகுதி மக்கள் இந்த மலைப்பகுதியை சுற்றி சுமார் 150 குடும்பங்களுக்கு மேல் வசித்து வருகின்றோம். தினசரி நகர்பகுதிக்கு சென்றுவருவதற்கு போதிய சாலைவசதி இல்லாமலும், மருத்துவ வசதி உள்ளிட்ட அத்தியாவசிய தேவைகளுக்கும் மிகவும் சிரமப்பட்டு வருகிறோம் என தெரிவித்தார்கள். அப்பொழுது அப்பகுதி மக்களிடம் தங்கள் கோரிக்கைகளுக்கு விரைவில் தீர்வு காணும் வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்தார். இந்த ஆய்வில் வட்டாட்சியர் (போடிநாயக்கனூர்) .சுருளி, போடிநாயக்கனூர் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மக்கத்தம்மாள், சோனா மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உடனிருந்தனர்.




■ தமிழ்நாடு தொழில் வர்த்தக சங்க கூட்டரங்கில் மதுரை தெற்கு வட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, தலைமையில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் குடிநீர், சுகாதாரம் மற்றும் சாலைப் பணிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்தும், தமிழ்நாடு அரசின் சேவைகள் உரிய பயனாளிகளைச் சென்றடைவதை உறுதி செய்வது குறித்தும் அனைத்துத் துறை அரசு அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## மீனாட்சி அம்மன் கோவில் கும்பாபிஷேகம்: முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆணையாளர் ஆய்வு





மதுரை, ஆக.20-

மதுரை மாநகராட்சி, அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் நடைபெற உள்ளதையொட்டி, மாநகராட்சி மூலம் மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற்பாடு பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பாக மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார் இ.ஆ.ப., நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோயில் கும்பாபிஷேகம் வெகு சிறப்பாக நடைபெற உள்ளது. கும்பாபிஷேகம் நடைபெறுவதையொட்டி, பல்வேறு பகுதிகளில் இருந்து சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்கள் அதிக அளவில் வருகை தந்து தரிசனம் மேற்கொள்வார்கள். திருக்கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் சிரமமின்றி தரிசனம் மேற்கொள்ள ஏதுவாக மாநகராட்சியின் மூலம் தேவையான அடிப்படை வசதிகள் மேற்கொள்ளப்படும். இன்றைய தினம் மாநகராட்சி ஆணையாளர் அவர்கள், திருக்கோயிலை சுற்றியுள்ள வடக்கு மாசி வீதி, தெற்கு மாசி வீதி, மேற்கு மாசி வீதி மற்றும் கிழக்கு மாசி வீதி ஆகிய பகுதிகளை பார்வையிட்டதுடன், அப்பகுதிகளில் செயல்பட்டு வரும் பொதுகழிப்பறை, கோவிலை சுற்றியுள்ள நடைபாதை, குடிநீர், கோவிலை சுற்றி அமைக்கப்பட்டுள்ள தெருவிளக்குகள், பொதுமக்கள் வருகை தரும் பாதைகள் மற்றும் மழைநீர் செல்லும் வடிகால்கள் ஆகியவற்றை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். கும்பாபிஷேகத்தை காண பொதுமக்கள் அதிகளவில் வருகை தர உள்ளதால் அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளான குடிநீர் வசதி, கழிப்பறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகளை மேற்கொள்வதற்கு உரிய பணியாளர்களை நியமித்திட வேண்டும் என அலுவலர்களிடம் தெரிவித்ததுடன், அப்பகுதியில் உள்ள கழிப்பறைகளை எப்பொழுதும் சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்துக்கொள்ள வேண்டும் எனவும், நடைபாதைகளில் ஆங்காங்கே உள்ள பழுதுகள் மற்றும் மராமத்து பணிகளை உடனுக்குடன் சரி செய்திட வேண்டும் எனவும் அலுவலர்களிடம் தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து, கோயிலை சுற்றியுள்ள தெருவிளக்குகளின் நிலை குறித்து அப்பகுதியில் பார்வையிட்டதுடன், தெருவிளக்குகளில் ஏதேனும் பழுது ஏற்பட்டால் அவற்றை உடனடியாக சரி செய்து பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும் எனவும் அறிவுறுத்தினார். மேலும், திருக்கோவிலை சுற்றியுள்ள பகுதிகளில் மாநகராட்சியின் மூலம் வைக்கப்பட்டுள்ள குப்பை தொட்டிகளில் குப்பைகள் சேர்ந்தவுடன் அவற்றை உடனடியாக மாநகராட்சி வாகனங்கள் மூலம் அப்புறப்படுத்தி அப்பகுதிகளை சுத்தமாகவும், தூய்மையாகவும் வைத்துக் கொள்ள வேண்டும் எனவும் அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது, உதவி ஆணையாளர் குமரன் , உதவி நகர்நல அலுவலர் அபிஷேக் , உதவி செயற்பொறியாளர் முத்து அவர்கள் மற்றும் மாநகராட்சி அலுவலர்கள் உடனிருந்தனர்.



## கன்னியாகுமரி மாவட்டம் தேங்காய்பட்டிணம் மீன்பிடி துறைமுக ஏலக்கூடம்சீரமைக்க நடவடிக்கை மேறக்கொள்ளப்படும்

### மாவட்ட ஆட்சித்தலைவர் பிரதாப், திடீர் ஆய்வு மேற்கொண்டார்

கன்னியாகுமரி, ஆக.20-

கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட கடலோர கிராம பகுதிகளை தமிழ்நாடு அரசானது மீன்வளத்துறையின் சார்பில் மீன்பிடித்தொழில் ஈடுப்படும் மீனவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினருக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகள் வழங்கி வருவதோடு, மீனவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையில் வளர்ச்சி திட்டப்பணிகள் மேற்கொண்டு வருகிறது. குறிப்பாக சின்னமுட்டம், முட்டம், குளச்சல், தேங்காய்பட்டணம், இரையுமன்துறை உள்ளிட்ட கடலோர பகுதி துறைமுகங்களில் தூண்டில் வளைவுகள், மீன்வலைபின்னும் கூடம், ஓய்வுக்கூடம், மீன் ஏலக்கூடம், அலை தடுப்பு சுவர் உள்ளிட்ட பணிகள் நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் தேங்காய்பட்டணம் துறைமுக பகுதிகள் திடீர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டதோடு, வளாகத்தில் உள்ள மீன்பிடித்துறைமுகத்தில் குடிநீர் வசதி, மின்சார வசதி, படகுகள் பாதுகாப்பாக வந்து செல்லும் முகத்துவாரப் பகுதி மற்றும் மீன்களைக் கையாளுவதற்குக் கட்டமைக்கப்பட்டுள்ள மீன் ஏலக்கூடம் ஆகியவற்றின் நிலை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுகாதாரமான முறையில் மீன்களை ஏலம் விடுவதற்கும், ஏலக்கூடத்தை எப்போதும் தூய்மையாகப் பராமரிப்பதற்கும் அறிவுறுத்தப்பட்டது. தொடர்ந்து, விசைப்படகு மற்றும் பாரம்பரிய மீன்பிடி தொழில் செய்யும் மீனவப் பிரதிநிதிகளையும், உள்ளூர் தொழிலாளர்களையும் நேரில் சந்தித்து கலந்துரையாடப்பட்டது. மீனவர்கள் தரப்பில் பல்வேறு கோரிக்கைகள் கேட்டறியப்பட்டது. அப்போது மீனவர்கள் ஏலக்கூடத்தினையும், ஏலக்கூடத்தின் அருகில் உள்ள சிறிய அளவிலான கழிவுநீர் ஓடையினையும் சீரமைத்து தருமாறும், கழிவறையினை மற்றொரு இடத்திற்கு மாற்றி தருமாறும், மருத்துவ வசதிகள் ஏற்படுத்திடுமாறும் கோரிக்கை வைத்தார்கள். அவர்களின் கோரிக்கைகளுக்கு உடனடி நடவடிக்கை மேற்கொள்ள மீன்வளத்துறை துணை இயக்குநருக்கு அறிவுறுத்தப்பட்டது. மேலும் துறைமுக முகத்துவாரத்தில் தொடர்ந்து ஏற்படும் மணல் திட்டுக்களை அகற்றி, படகுகள் தடையின்றி வந்து செல்ல நிரந்தர தூர்வாரும் நடவடிக்கை எடுக்க துறை சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் .மு. பிரதாப். தெரிவித்தார்.

## பொன்னேரி அரசு மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை வழங்கும் முகாம்



திருவள்ளூர், ஆக.20-

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அரசு மருத்துவமனையில் மாற்றுத்திறனாளிகளின் மாதாந்திர அடையாளை அட்டை வழங்கும் முகாமில் தலைமை மருத்துவர் விக்னேஷ் தலைமையிலும் , பொன்னேரி வட்டாட்சியர் ஜெய்கர்பாபு முன்னிலையிலும் நடைபெற்றது இம்மாமில் மாற்றுத்திறனாளிகளின் தகுதியின் அடிப்படையில் அனைத்து சேவைகளான தேசிய அடையாள அட்டை, உபகரணங்கள், மற்றும் வீல்சேர் கை கட்டை கால் கட்டை ஸ்கூட்டர், உதவித்தொகை உள்ளிட்டவைகளுக்கு மருத்துவ பரிசோதனைகள் செய்து சான்றுகள் வழங்கப்பட்டன, நேரடியாக திருவள்ளூர் மாவட்ட மாற்றுத்திறனாளி நல துறை அதிகாரி திரு குமார் அலுவலர் வழிகாட்டலின்படி நடத்தப்படும் முகாமை பொன்னேரி நியமன கவுன்சிலர் கருணாகரன் ஏற்பாடு செய்திருந்தார், இதில் வட்டாரத்தில் அடங்கிய நூற்றுக்கும் மேற்பட்ட மாற்றுத் திறனாளிகள் கலந்து கொண்டு பயன் பெற்றனர் மேலும் பங்குபெறும் மாற்றுத்திற னாளிகளுக்கு உதவுகின்ற வகையில் தமிழ்நாடு மாற்றுத்திறனாளி உரிமை திட்ட பணியாளர்கள் 30,பேர் கலந்துகொண்டு வேண்டிய உதவிகளை செய்தனர், நியமன கவுன்சிலர் பிரேமா, கலாவதி, டி என் ரைஸ் தமிழ்நாடு உரிமைகள் திட்டம் ஒருங்கிணைப்பாளர் பொன்னேரி சதீஷ், சோழவரம் அஸ்வின், கும்மிடிப்பூண்டி அருண்பாலாஜி, சமூக ஆர்வலர் ஷகில், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர் அந்த முகாமில் மாற்றுத்திறனாளிகளுக்கு வீட்டு மனை கேட்டு வட்டாச்சியரிடம் நியமன கவுன்சிலர் கருணாகரன் தலைமையில் மனு அளிக்கப்பட்டது. இம்மு முகாமில் கடந்த பத்து வருடங்களாக ராகவா டிசைபில்டு பீப்பிள்ஸ் டிரஸ்ட் நிறுவனர் எஸ் ரகோத்தமன் மூலமாக மாற்றுத்திறனாளிகளுக்கு உணவு வழங்கப்படுகிறது



## தேனியில் போலீசார் தீவிர நடை ரோந்து குற்றத் தடுப்பு நடவடிக்கை

தேனி, ஆக.20-

தேனி மாவட்ட காவல்துறையினர். பொதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும் தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் K.S.பிரவீன் கௌதம் உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.



■ திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்தில் 19.08.2026 அன்று வாராந்திர பொதுமக்கள் குறைதீர்வு கூட்டம் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., தலைமையில் நடைபெற்றது. இக்குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடம் மனுக்கள் பெறப்பட்டன. மனுக்களை விசாரணை செய்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்தார்கள்.

## ஸ்ரீ நாகாத்தம்மன், ஜடா முனீஸ்வரர், பறாவக்காளியம்மன்- புற்றுக்கோயில் ஆடிமாத 27-ம் ஆண்டு ஆடிதிருவிழா -1- ம் ஆண்டு தீமிதி திருவிழா



மாதவரம், ஆக.20-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் நல்லூர் ஊராட்சி நாகாத்தம்மன் நகரில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ நாகாத்தம்மன், ஜடா முனீஸ்வரர், பறாவக்காளியம்மன் புற்றுக்கோயில் ஆடிமாத 27-ம் ஆண்டு ஆடிதிருவிழா மற்றும் 1-ம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் வீரையா, செயலாளர் ரவிக்குமார், பொருளாளர் சுப்பிரமணி, கௌரவத்தலைவர் வெங்கடேசன், உபதலைவர் கிருஷ்ணன், கௌரவ ஆலோசகர் சந்திரபோஸ், இணைத்தலைவர்கள் ரமேஷ், சிவா, இணை செயலாளர்கள் குமார், அருணாச்சலம், கணக்கு தணிக்கையாளர் வினோத்குமார், துணைத்தலைவர்கள் சங்கர், ராஜேஷ், துணை செயலாளர்கள் பாலமுருகன், கண்ணன், செயற்குழு பொறுப்பாளர்கள் முரளி, செந்தில், விழாகுழு ஒருங்கிணைப்பாளர்கள் வசந்த், நித்தியானந்தம் மற்றும் கிராமபொதுநலச்சங்க நிர்வாகிகள் தலைவர் கணேசன், செயலாளர் தர்மராஜ், பொருளாளர் சுரேஷ்,கௌரவ செயற்குழு உறுப்பினர் சாலமன், கௌரவத்தலைவர் சந்திரபோஸ், கௌரவ ஆலோசகர் வெங்கடேசன், உபதலைவர் வீரையா, இணைத்தலைவர் அன்பு, இணை செயலாளர் முனியாண்டி, கணக்கு தணிக்கையாளர் வினோத்குமார், துணைத்தலைவர் அப்துல்லதீப், துணை செயலாளர் ரவிக்குமார், ஒருங்கிணைப்பாளர் சிவா உள்ளிட்ட ஆலய மகளிர் குழுவினர்கள்,கமிட்டி குழுவினர்கள், இளைஞர்கள் உட்பட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி ஹோமம், பந்தகால்நடுதல், பால்குடம் எடுத்தல், தாய்வீட்டுசீர் எடுத்தல், கங்கைநீர் திரட்டுதல், கூழ்வார்த்தல், முளைப்பாரி எடுத்தல், அக்னி கப்பறை எடுத்தல் மற்றும் சுவாமிகளுக்கு அபிஷேக ஆராதனைகள் போன்றவை நடைபெற்றது. பின்னர் காப்புகட்டிய 100-க்கும் மேற்பட்ட பக்தர்கள் தீகுண்டத்தில் இறங்கி தங்களின் நேர்த்தி கடனை பூர்த்தி செய்தனர்.மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர். இத்திருவிழாவிற்கு சுற்றுவட்டார பக்தர்கள், கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அர்ச்சனைகள் செய்து சுவாமி தரிசனம் செய்தனர்.முடிவில் அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலாநடைபெற்றது.




■ மதுரை மாவட்டம், நெடுஞ்சாலைத் துறை சார்பில் விரகனூர் சுற்றுச்சாலை அருகில் இருந்து பழைய தொண்டி சாலை சக்குடி வரை வைகை ஆற்றின் வடகரையில் ரூ.130 கோடி மதிப்பீட்டில் சுமார் 8 கி.மீ தூரத்திற்கு புதிய புறவழிச்சாலை அமைக்கப்பட்டு வரும் பணியினை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா பார்வையிட்டார். இந்த திட்டத்தின் கீழ் மதுரைசிவகங்கை சாலையில் போக்குவரத்து நெரிசல் குறைவதுடன், சுற்றுவட்டார கிராமங்களுக்கு நேரடி சாலை இணைப்பு கிடைக்கும். மேலும் பூவந்தி, சிவகங்கை செல்லும் பயணத் தூரம் குறைவதோடு, விரகனூர் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் குறையும் என எதிர்பார்க்கப்படுகிறது .



# பெண்கள் பாதுகாப்பு மற்றும் இணைய வழி குற்றங்கள் குறித்து விழிப்புணர்வு

திருப்பத்தூர், ஆக.20-

திருப்பத்தூர் மாவட்ட காவல்துறை சிங்கப்பெண் சிறப்பு அதிரடிப்படை சார்பில் பெண்கள் பாதுகாப்பு மற்றும் இணையவழி குற்றங்கள் குறித்த ஆம்பூர் பேருந்து நிலையம், ஆம்பூர் ராஜீவ் காந்தி சிலை JN, கதாவலம், அருங்கல்துருகம், காரப்பட்டு போன்ற இடங்களில் திருப்பத்தூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அக்ஷய் அனில் வாகரே, இ.கா.ப., வழிகாட்டுதலின்பேரில், விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.



■ தமிழக வெற்றிக் கழகம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் சார்பில் நாகர்கோவிலில் தியாகி குஞ்சன் நாடாரின் 52-வது நினைவு நாள் கடைப்பிடிக்கப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் தாய் தமிழகத்துடன் இணைய பாடுபட்ட நேசமணியின் வலதுகரமாக செயல்பட்டவர் வழக்கறிஞர் குஞ்சன் நாடார் அவர்கள் அவரது நினைவு தினத்தையொட்டி நாகர்கோவில் வெட்டூர்ணிமடம் சந்திப்பிலுள்ள அவரது சிலைக்கு தமிழக வெற்றிக் கழகம் கன்னியாகுமரி கிழக்கு மாவட்டம் சார்பில் மாவட்ட செயலாளர் மாதவன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்த நிகழ்வில் மாவட்ட இணை செயலாளர் பிரேம்குமார், தொழிலதிபர் பால்ராஜ், செயற்குழு உறுப்பினர்கள் நிகேஷ், சக்தி குமரன், மாநகர இணை செயலாளர் முத்துப்பாண்டி உட்பட நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மரியாதை செலுத்தினர்

# திருவள்ளூர் பொன்னேரி அருகே முதியவரை கட்டையால் தாக்கிய 4 பேர் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி ஆவடி காவல் ஆணையாளரிடம் மகன் புகார்

பொன்னேரி, ஆக.20-

பொன்னேரி அருகே மாடு அவிழ்த்துவிட்ட தகராறில், கூலித்தொழிலாளியை உருட்டுக்கட்டையால் கொடூரமாகத் தாக்கி விலா எலும்பு மற்றும் நுரையீரலில் படுகாயம் ஏற்படுத்திய நபர்கள் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி அவரது மகன் ஆவடி காவல் ஆணையாளர் அலுவலகத்தில் புகார் அளித்துள்ளார். இதுகுறித்து பொன்னேரி வட்டம், அத்திப்பேடு அண்ணாபுரம் கிராமத்தைச் சேர்ந்த கிஷோர் குமார் என்பவர் அளித்துள்ள புகார் மனுவில் கூறியிருப்பதாவது:-

உருட்டுக்கட்டையால் தாக்குதல்

"எனது தந்தையார் ரோஸ் பாபு (வயது 49). கடந்த 3-ந் தேதி காலை 9:30 மணியளவில், எங்கள் கிராமத்தைச் சேர்ந்த பால பிரசாந்த், பாலகுமார், உஷா மற்றும் கற்பகம் ஆகிய 4 நபர்கள் முன்விரோதம் காரணமாக நாங்கள் கட்டி வைத்திருந்த கறவை மாடுகளை அவிழ்த்துவிட்டு தகாத வார்த்தைகளால் பேசி



தகராறில் ஈடுபட்டனர். இதனை எனது தந்தை தட்டிக்கேட்டபோது, ஆத்திரமடைந்த அந்த 4 பேரும் சேர்ந்து உருட்டுக்கட்டை மற்றும் கைகளால் எனது தந்தையை கொடூரமாகத் தாக்கினர். இதனால் எனது தந்தைக்கு 4 விலா எலும்புகள் முறிவு ஏற்பட்டது இதைத் தடுக்கச் சென்ற என்னையும் அவர்கள் தாக்கி மிரட்டல் விடுத்தனர்.

தீவிர சிகிச்சை

இதில் பலத்த காயமடைந்த எனது தந்தையை உடனடியாகப் பொன்னேரி அரசு மருத்துவமனையில் சேர்த்தோம். பின்னர் மேல்சிகிச்சைக்காகச் சென்னை ஸ்டான்லி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில், அவரது 4 மற்றும் 5-வது விலா எலும்புகள் முறிந்து, நுரையீரலில் ரத்தக் கசிவு மற்றும் இதயச் சுவரில் வீக்கம் ஏற்பட்டது தெரியவந்தது. அங்கு அவருக்கு அவசர அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. தொடர்ந்து டிஸ்சார்ஜ் ஆகி வீடு திரும்பும் வழியில் மீண்டும் மூச்சுத்திணறல் ஏற்பட்டதால், தற்போது வேல்ஸ் மருத்துவமனை அவசரப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு தீவிர சிகிச்சை பெற்று வருகிறார்.

நடவடிக்கை எடுக்க கோரிக்கை

சம்பவம் குறித்து சோழவரம் காவல்துறையினர் வாக்குமூலம் பெற்றும், இதுவரை தாக்குதல் நடத்தியவர்கள் மீது எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. எனவே, எனது தந்தைக்குக் கொடுங்காயம் ஏற்படுத்திய பால பிரசாந்த், பாலகுமார், உஷா, கற்பகம் ஆகியோர் மீது உடனடியாகக் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்." இவ்வாறு அந்த மனுவில் கூறப்பட்டுள்ளது.

# எப்போதும் திறந்திருக்கும் இங்கே இருப்போம்" அப்போலோ மருத்துவமனை புதிய திட்டம் துவக்கம்

மதுரை, ஆக.20-

உலகிலேயே முதன்முறையாக சுகாதாரத் துறையில் 'எப்போதும் திறந்திருக்கும். எப்போதும் இங்கே இருப்போம்' என்ற முன்னோடித் திட்டத்தை அப்போலோ மருத்துவமனைகள் அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி, இந்தியாவிலேயே முதன்முறையாக அப்போலோ மருத்துவமனைகளில் ஞாயிற்றுக்கிழமைகளிலும் வழக்கமான மருத்துவ ஆலோசனைகள், உடல் நலப் பரிசோதனைகள், நோயறிதல் பரிசோதனைகள், அறுவை சிகிச்சைகள் மற்றும் திட்டமிடப்பட்ட சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. இதனால் பணிபுரிபவர்கள் வார நாட்களில் விடுப்பு எடுக்காமல் ஞாயிற்றுக்கிழமை மருத்துவப் பரிசோதனைகளை




மேற்கொள்ளவும், குடும்பத்தினர் வயதான பெற்றோரை மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவும் வசதி ஏற்படும். தொடர் சிகிச்சை பெறுவோர் அடுத்த வாரம் வரை காத்திருக்க வேண்டிய அவசியமும் இருக்காது. அப்போலோ மருத்துவமனைகள் குழும நிறுவனர் டாக்டர் பிரதாப் சி. ரெட்டி கூறுகையில், நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதுடன், நோய்களை முன்கூட்டியே கண்டறிந்து தடுப்பதே முக்கியம் என்றும், வாரத்தின் 7 நாட்களும் வழக்கமான மற்றும் தடுப்பு மருத்துவச் சேவைகளை வழங்கும் வகையில் இந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். மதுரைமண்டலஅப்போலோ மருத்துவமனைகள் தலைமை நிர்வாக அதிகாரி டாக்டர் நிகில் திவாரி கூறுகையில், குறிப்பிட்ட அட்டவணைப்படி ஞாயிற்றுக்கிழமைகளிலும் சிறப்பு மருத்துவர் ஆலோசனை, பரிசோதனைகள் மற்றும் திட்டமிடப்பட்ட சிகிச்சைகளை நோயாளிகள் பெறலாம் என்றார். நாட்டில் அதிகரித்து வரும் உயர் ரத்த அழுத்தம், நீரிழிவு உள்ளிட்ட வாழ்க்கை முறை நோய்களை கருத்தில் கொண்டு, மருத்துவ சேவைகளை பொதுமக்களுக்கு மேலும் எளிதில் அணுகக்கூடியதாக மாற்றும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது.

# மொத்தக் கழிவு உருவாக்குபவர்களே உஷார்! 15 நாட்களுக்குள் கட்டாயப் பதிவு மாநகராட்சி ஆணையர் கௌரவ்குமார் அதிரடி உத்தரவு

மதுரை, ஆக.20-

திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-அமலாக்கம் மொத்தக் கழிவு உருவாக்குபவர்களின் (Bulk Waste Generators) கட்டாயப் பதிவு திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026 (Solid Waste Management Rules, 2026)-ன்படி பின்வரும் அளவுகோல்களில் ஏதேனும் ஒன்றைப் பூர்த்தி செய்யும் நிறுவனம் அல்லது அமைப்பு "மொத்தக் கழிவு உருவாக்குபவர் (Bulk Waste Generator BWG) என வகைப்படுத்தப்படும்: மொத்தம் 20,000 சதுர மீட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட பரப்பளவு (Built-up area) கொண்ட கட்டிடம்: அல்லது நாள் ஒன்றுக்கு 40,000 லிட்டர் அல்லது அதற்கு மேற்பட்ட நீர் நுகர்வு கொண்ட நிறுவனம்: அல்லது நாள் ஒன்றுக்கு 100 கிலோகிராம் அல்லது அதற்கு மேற்பட்ட திடக்கழிவை உருவாக்கும் நிறுவனம் அல்லது அமைப்பு. மேற்கண்ட வரையறையின்படி, நிறுவன அமைப்புகள், வணிக நிறுவனங்கள், குடியிருப்பு நலச் சங்கங்கள் (RWAs), ஹோட்டல்கள்/விடுதிகள், மருத்துவமனைகள், கல்வி நிறுவனங்கள். தகவல் தொழில்நுட்ப (IT) பூங்காக்கள், திருமண மண்டபங்கள், வணிக வளாகங்கள். சந்தைகள், தொழிற்சாலைகள் மற்றும் பிற பெரிய நிறுவனங்கள் அனைத்தும் மொத்தக் கழிவு உருவாக்குபவர்கள் (BWGs) எனும் பிரிவின் கீழ் அடங்கும். கட்டாயப் பதிவு: அனைத்து மொத்தக் கழிவு உருவாக்குபவர்களும் (BWGs) மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) அதிகாரப்பூர்வ இணையதளம் மூலம் கட்டாயமாகப் பதிவு செய்ய வேண்டும். பதிவுக்கான கால அவகாசம்: தகுதியுள்ள அனைத்து மொத்தக் கழிவு உருவாக்குபவர்களும் (BWGs) இந்தச் செய்திக்குறிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து 15 நாட்களுக்குள் தங்களது கட்டாயப் பதிவை முடிக்க வேண்டும். விதிமீறல் தொடர்பான நடவடிக்கை: குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பதிவை முடிக்கத் தவறும் மொத்தக் கழிவு உருவாக்குபவர்கள் மீது தகுந்த சட்டப்பூர்வ நடவடிக்கை எடுக்கப்படும். மீறலுக்கான தண்டனை: விதிமுறைகளைப் பின்பற்றத் தவறுவது. மேற்கூறிய விதிகளின்படி கடுமையான அமலாக்க நடவடிக்கைகளுக்கும் அபராதங்களுக்கும் வழிவகுக்கும். கழிவு மேலாண்மை நடைமுறைகள்: மொத்தக் கழிவு உருவாக்குபவர்கள் (BWGs) தங்களது சொந்தச் செலவில் தேவையான 4 வண்ணக் குறியீடுகள் கொண்ட குப்பைத் தொட்டிகளை வாங்க வேண்டும். மேலும், கழிவுகளை அவை உருவாகும் இடத்திலேயே (மூலத்திலேயே) ஈரக் கழிவு, உலர் கழிவு, சுகாதாரக் கழிவு மற்றும் சிறப்புக் கவனிப்புக் கழிவு எனத் தனித்தனியாகப் பிரிப்பதை உறுதி செய்ய வேண்டும். பிரிக்கப்பட்ட கழிவுகள் தங்களது வளாகத்தின் நுழைவாயிலில் வைக்கப்பட்டு, மதுரை மாநகராட்சி மூலம் அங்கீகரிக்கப்பட்ட முகமையிடம் (Agency) ஒப்படைக்கப்பட வேண்டும். விரிவாக்கப்பட்ட மொத்தக் கழிவு உருவாக்குபவர் பொறுப்பு (EBWGR): ஒரு மொத்தக் கழிவு உருவாக்குபவரால் தங்களது வளாகத்திற்குள் மட்டும் (ஈரக்) கழிவைச் செயலாக்க இயலாத பட்சத்தில், அவள் திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-ன் விதி 10-ன் கீழ் உள்ள "விரிவாக்கப்பட்ட மொத்தக் கழிவு உருவாக்குபவர் பொறுப்பு" (EBWGR) தொடர்பான விதிகளுக்கு இணங்க வேண்டும். மேலும், பொருந்தக்கூடிய இடங்களில் சம்பந்தப்பட்ட மாநகராட்சி மூலம் நிர்ணயிக்கப்பட்ட EBWGR சான்றிதழ் அல்லது இணக்கச் சான்றைப் (Proof of Compliance) பெற வேண்டும். ஆய்வு மற்றும் சரிபார்ப்பு: மொத்தக் கழிவு உருவாக்குபவர்கள் (BWGs) தங்களது வளாகம். பதிவேடுகள் மற்றும் கழிவு மேலாண்மை வசதிகளை, மதுரை மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-ன் கீழ் அதிகாரம் பெற்ற வேறு எந்தவொரு தகுதியுள்ள அதிகாரியும் ஆய்வு செய்ய அனுமதிக்க வேண்டும். மேலும், ஆய்வு அல்லது சரிபார்ப்பின் போது தேவைப்படும் தகவல்கள், பதிவேடுகள் மற்றும் ஆவணங்களை வழங்க வேண்டும். பதிவு செய்யும் இணையதளம்: மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் (CPCB): மாநகராட்சியின் பெயர் (இணைப்பு: https://swm.cpcb.gov.in/register) குறிப்பு: மொத்தக் கழிவு உருவாக்குபவர்களின் (BWGs) ஆன்லைன் பதிவை எளிதாக்கவும், பதிவு இணையதளத்தில் தேவையான தகவல்களைப் பதிவேற்றம் செய்ய உதவவும், மற்றும் திடக்கழிவு மேலாண்மை விதிகள், 2026-ன் விதிமுறைகளுக்கு இணங்குவதற்கான தேவையான வழிகாட்டுதல்களை வழங்கவும் "பதிவு செய்வதற்கான உதவி" (Registration Assistance) வழங்கப்படுகிறது.

# மேலநெட்டூர் அரசு பள்ளியில் கணித ஆசிரியரை மாற்றக் கோரி முற்றுகைப் போராட்டம்: அதிகாரிகள் பேச்சுவார்த்தையை அடுத்து போராட்டம் வாபஸ்!



சிவகங்கை, ஆக.20-

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை ஒன்றியத்துக்கு உட்பட்ட மேலநெட்டூர் அரசு உயர்நிலைப் பள்ளியில் கணித ஆசிரியர் தெய்வேந்திரனை மாற்றக் கோரி மாணவர்களின் பெற்றோர், பள்ளி மேலாண்மைக் குழுவினர், பொதுமக்கள் மற்றும் பெண் நீதி பெண்கள் அமைப்பினர் சார்பில் நேற்று பள்ளி முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. கணித ஆசிரியர்



தெய்வேந்திரன் மாணவர்களுக்கு முறையாக பாடம் கற்பிக்காமல் அலட்சியம் காட்டி வந்ததாகவும், மாணவர்களை ஆபாச வார்த்தைகளால் திட்டி அடித்ததாகவும் குற்றம் சாட்டப்பட்டது. மேலும், கடந்த 3 ஆண்டுகளாக மாணவர்களின் கல்வி வளர்ச்சி பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாக பெற்றோர்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்பட்டது. ஏற்கனவே இதுதொடர்பாக மனுக்கள் அளித்தும் நடவடிக்கை எடுக்கப்படாததால் நேற்று போராட்டம் தீவிரமடைந்தது. இதனைத் தொடர்ந்து, மாவட்ட கல்வி அலுவலர் மாரிமுத்து, மானாமதுரை வட்டாட்சியர் கிருஷ்ணகுமார் மற்றும் பள்ளி துணைத் தலைமை ஆசிரியர் பாலகிருஷ்ணன் ஆகியோர் போராட்டக்காரர்களிடம் நேரில் சென்று அமைதிப் பேச்சுவார்த்தை நடத்தினர். பேச்சுவார்த்தையின் முடிவில், சம்பந்தப்பட்ட கணித ஆசிரியர் தெய்வேந்திரனை உடனடியாக பணியிட மாற்றம் செய்வதாக அதிகாரிகள் உறுதியளித்து உத்தரவு பிறப்பித்தனர். அதிகாரிகளின் இந்த உத்தரவைத் தொடர்ந்து முற்றுகைப் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டது.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161